1 4 FEB 1966
STATE LEGISLATURE, MA

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 3rd November 1965.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past ten of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—CONDOLENCE RESOLUTION ON THE DEATH OF SRI BALWANTHRAI MEHTA AND SRIMATHI MEHTA.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் சபாநாயகர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரேரேபிக்க விரும்புகிறேன்.

"This House expresses its shock and deep sence of sorrow at the tragic death of Sri Balwanthrai Mehta, the then Chief Minister of Gujarat and Srimathi Mehta due to the barbarous and dastardly attack by Pakistan and conveys its profound sympathy to the members of the bereaved family and the Government and the people of Gujarat".

கனம் சபாநாயகர் அவர்களே, குஜராத் மாநிலத்தின் முதல் அமைச்சர் அவர்கள் மறைந்தார்கள் என்பது மட்டும் அல்ல இந்தத் தீர்மானம் குறிப்பிடுவது. அவர்கள் திடீரென்று அகால மரணம் அடைந்தார்கள். அதுவும் பாகிஸ்தான் வெறியர்களுடைய தவறான, கொடூரச் செயலினால் ஸ்ரீ பல்வந்த்ராய் மேத்தா அவர்களும், அவருடைய மனைவியாரும் மரணம் அடைந்ததைத் குறிப்பிடுகிறது.

பாகிஸ்தான் வெறியர்கள் நிரபராதிகளை எல்லாம் ஆகாயத்தில் இருந்து குண்டு போட்டுக் கொன்று கொண்டிருந்தார்கள். சிவிலியன்கள் வசித்துக் கொண்டிருந்த நகரங்களை எல்லாம் அழித்துக் கொண்டிருந்தார்கள். காஷ்மீரத்தில் போர் நடந்து கொண்டிருந்தது. அதற்கு மேல் பஞ்சாபில் ஏற்பட்டது, ராஜஸ்தானில் ஏற்பட்டது. ஆனால் சண்டையே நடைபெறாத பகுதிகளுக்குச் சென்று பாகிஸ்தான் வெறியர்கள் குண்டு போட்டார்கள். பாகிஸ்தான் ஆகாய விமானங்கள் செல்வதற்கு நிமித்தம் இல்லாத மற்ற இடங்களுக்கும், மற்ற நகரங்களுக்கும் சென்று குண்டுகள் போட்டுக் கொண்டிருந்தார்கள். அத்தகைய பாகிஸ்தானின் வெறிச் செயலுக்கு ஆளான நகரங்களில் ஜாம்நகர் ஒன்று, துவாரகா ஒன்று. இவை குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவை. குஜராத் எல்லையில் உள்ள கட்ச் சம்பந்தமான போர் நிறுத்த ஒப்பந்தத்திற்குச் சம்மதித்துவிட்டுத்தான் பாகிஸ்தான் காஷ்மீர் எல்லையில் போரைத் துவக்கிற்று. அந்த இடத்தில் சண்டை நடந்து கொண்டிருந்தபோதுதான் பாகிஸ்தான் வெறியர்கள் குஜராத்தைச் சேர்ந்த ஜாம்நகர், துவாரகா ஆகியவற்றைத் தாக்கினார்கள். நியாய புத்தி என்பதே கொஞ்சமும் இல்லாத பாகிஸ்தானின் கொடூரச் செயலுக்கு ஆளான மக்கள் அங்கே மிகவும் பரிதவித்துக் கொண்டிருந்தார்கள். அந்த இடங்களுக்கு

நேரில் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கப்படுகிற வேலையைப் பார்ப்பதற்காகவும், அவர்களுக்கு ஆறுதலும், மனோ திடமும் அளிக்கின்ற வகையில் அவர்களோடு கலந்து பேசுவதற்காகவும் ஸ்ரீ பல்வந்த்ராய் மேத்தா அவர்கள் ஆகாய விமானத்தில் அங்கே சென்றார்கள். பாதிக்கப்பட்டவர்களில் பெண்மணிகளும் நிறைய இருந்தார்கள். அவர்களோடு பேசி அவர்களுடைய துன்பத்தைக் குறைத்து நிவாரணம் அளிக்க ஸ்ரீ மேத்தா அவர்களுடைய மனைவியாரும் கணவனோடு கூட ஆகாய விமானத்தில் சென்றார்கள். ஸ்ரீ மேத்தா அவர்கள் 2 மணிக்குப் புறப்பட்டார்கள் என்றால், 1 மணி வரையில் அவர்கள் மாநில அரசாங்க அலுவல்களைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். முக்கியமான உணவுப் பிரச்சினை, விவசாயப் பிரச்சினை ஆகியவை சம்பந்தமாக மத்திய அரசாங்கத்தில் இருந்து வந்த கடிதங்களை வைத்துக் கொண்டு மாநில நிர்வாக அதிகாரிகளோடு கலந்து பேசிக் கொண்டிருந்தார்கள். ஒரு மணிக்குப் பிறகுதான், பாகிஸ்தான் வெறியர்களினால் தாக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிக்க ஆகாய விமானத்தில் சென்றார்கள். இவர்கள் சென்றது யுத்த ஆகாய விமானம் இல்லை. யுத்த ஆகாய விமானம் என்று தவறாக எடுத்துக் கொள்வதற்குக் கூடக் கொஞ்சமும் இடமில்லை. இருந்தும் இந்த ஆகாய விமானத்தை யுத்த நியதி, யுத்த தர்மம் என்பது கூடக் கொஞ்சமும் அற்ற பாகிஸ்தான் வெறியர்களின் போர் விமானம் தாக்கியது. அந்தத் தாக்குதலுக்கு ஸ்ரீ பல்வந்த்ராய் மேத்தா அவர்களும், அவர்களது மனைவியாரும் இரையானார்கள். அவர்களோடு சென்றவர்களும், விமானத்தை ஓட்டியவர்களும் இரையானார்கள். ஒருவர் கூடத் தப்பித்துக் கொள்ளவில்லை. அவர்கள் சென்ற விமானம் அடியோடு நாசம் ஆகிவிட்டது. மிகவும் கேவலமான, கொடூரமான இந்தச் செய்தி நம்மைத் திடுக்கிடச் செய்தது. நான் நினைக்கிறேன்—உலகத்தையே திடுக்கிடச் செய்திருக்க வேண்டும். நாம் எல்லாம் திடுக்கிட்டு மனம் வருந்தினோம்.

ஸ்ரீ பல்வந்த்ராய் மேத்தா அவர்கள் பொதுநல ஊழியர் என்பது மட்டும் அல்ல. நீண்டகாலமாகவே சுதந்திரப் போராட்ட காலத்தில் மகத்தான தொண்டு புரிந்தவர்கள். சுதந்திரப் போராட்டத்தில் பெரும் பங்கு எடுத்துக் கொண்டதோடு மட்டும் அல்ல, அந்த மாநிலத்தின் முதல் அமைச்சராகவும் இருந்து மாநில ஆட்சியிலும் பெரும் தொண்டாற்றியிருக்கிறார்கள். பாராளுமன்ற உறுப்பினராக இருந்தும் சிறந்த பணி ஆற்றியிருக்கிறார்கள்.

இன்றைக்கு நாம் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் என்பதாக அதிகாரத்தைப் பரவலாக மக்களிடத்தில் அளித்துச் செயலாற்றி வருகிறோமே இந்த ஸ்தல ஸ்தாபன நிர்வாக அமைப்பையே ஒரு வகையில் ஸ்ரீ. மேத்தா அவர்கள்தான் நமக்குத் தயாரித்து அளித்தார்கள். இது சம்பந்தமான ஒரு திட்டத்தைத் தயாரிக்க மத்திய அரசாங்கம் அமைத்த ஒரு கமிட்டிக்கு ஸ்ரீ பல்வந்த்ராய் மேத்தா அவர்கள் தான் தலைமை வகித்து, நாடு பூராவும் சென்று மக்களுடைய கருத்தை அறிந்து, நம்மைப் போன்றவர்கள்

சொன்ன யோசனைகளை எல்லாம் பரிசீலனை செய்து இந்தப் பஞ்சாயத்து நிர்வாக அமைப்புத் திட்டத்தை உருவாக்கினார்கள். அவர் அளித்த திட்டத்தின்படிதான் ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் நம் மாநிலத்திலும், மற்ற மாநிலங்களிலும் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

ஸ்ரீ பல்வந்த்ராய் மேத்தா அவர்களுக்கு கிராமங்களில் உள்ள வசதிகளைப் பெருக்குவதில் மிகுந்த ஆர்வம் உண்டு. அதை உணர்ந்துதான் மத்திய அரசாங்கத்தினர் கிராம மக்களின் குடி தண்ணீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்கு ஸ்ரீ மேத்தா அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்தார்கள். அந்தக் குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஸ்ரீ மேத்தா அவர்கள் ஆங்காங்கே சென்று நம்மை எல்லாம் சந்தித்துப் பேசி சிறந்த ஒரு திட்டத்தை நமக்குக் கொடுத்தார்கள். இப்படி நான் திருஷ்டாந்தமாக ஒன்றிரண்டு சொன்னேனே தவிர அவர் ஆற்றியுள்ள சிறப்பான பணிகள், விசேஷப் பணிகள் பல உண்டு. என்றைக்கும் அவர்கள் அடக்கத்தோடு, ஆர்வத்தோடு, திறனோடு, தன்னலமற்ற வகையில் அருந்தொண்டாற்றி வந்திருக்கிறார்கள். அவருக்கு எப்போதும் பக்கபலமாக இருந்து, அவர் ஆற்றிய பணிகள் எல்லாம் வெற்றிபெறச் சிறப்பாக உதவி செய்து வந்துள்ளவர் அவரது வாழ்க்கைத் துணைவியார். அவர்கள் இருவரும் கொடிய பகைவனது விமானத் தாக்குதலுக்கு உள்ளாகிக் காலமானார்கள். அவர்களது மரணம் வீர மரணம். நாமும், நம்முடைய சந்ததியினரும் பெருமைப்படத் தக்க ஒன்று. நமக்கு ஆழ்ந்த துக்கத்தையும் இது அளித்திருக்கிறது. நம்மைத் திடுக்கிடவும் வைத்திருக்கிறது. இதன் காரணமாக நம்முடைய ஆழ்ந்த அனுதாபத்தை ஸ்ரீ பல்வந்த்ராய் மேத்தா அவர்களின் குடும்பத்தினருக்கு நாம் தெரிவித்துக் கொள்ளலாம். குஜராத் அரசாங்கத்திற்கும் நம் துக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளலாம். இவரது மறைவு குஜராத் அரசாங்கத்திற்குப் பெருத்த நஷ்டம் மிகப் பெரும் சோதனை. உடனடியாக மீண்டும் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு மிகச் சீரிய வகையில் இந்தச் சோதனையைச் சமாளித்து வருகிறார்கள்.

குஜராத் மாநில மக்களுக்கு நம்முடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. எல்லாவற்றையும்விட முக்கியமானது, இப்பொழுது நம்முடைய நாட்டிலே ஆக்கிரமிப்புச் செய்திருக்கின்ற எதிரிகள் எத்தன்மையானவர்கள் என்பது. முன்பெல்லாம் நாம் வரலாற்றிலே கேள்விப்பட்டிருக்கிறோம்—இந்த நாட்டின்மீது படையெடுத்தவர்கள் எத்தகைய கொடூரமான செயல்களைச் செய்தார்கள், எத்தகைய அழிவை ஏற்படுத்தினார்கள், எவ்வளவு நாசத்தை விளைவித்தார்கள் என்பதைப்பற்றியெல்லாம் நாம் படித்திருக்கிறோம். அதே மாதிரி இப்பொழுதும் எதிரிகள் தவறுதலான வகையிலே எத்தகைய கொடூரமான செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நாம் உணர்கிறோம். நாம் அவர்களை அடியோடு விரட்டியடிக்க

வேண்டுமென்று உறுதிகொண்டு இருக்கிறோம். திரு. பல்வந்த்ராய் மேத்தா அவர்களுடன் அவர்களுடைய மனைவியாரும் இத்தகைய சம்பவத்தினால் உயிர் துறக்க நேர்ந்ததை எண்ணி நாம் துக்கப்படுகிறோம். நாம் அவர்களுடைய குடும்பத்தாருக்கு நம்முடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, எதிரிகளை நாம் எல்லோரும் ஒருமனதோடு, எவ்வளவு சீக்கிரம் விரட்டியடிக்கக் கூடுமோ, அவ்வளவு சீக்கிரம் விரட்டியடிக்கவேண்டுமென்ற உறுதியையும் எடுத்துக்கொள்ளவேண்டும். ஆகவே, இந்தத் தீர்மானத்தை மன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் நான் எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத்தலைவரவர்களே, குஜராத் மாநில முன்னாள் முதலமைச்சர் உயர்திரு பல்வந்த்ராய் மேத்தா அவர்களுடைய மறைவைக் குறித்து, கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற அனுதாபத் தீர்மானத்தை எதிர்க்கட்சிகளின் சார்பாகவும், குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் நான் ஆதரிக்கிறேன். எல்லோருக்கும் அதிர்ச்சியைத் தரத்தக்க முறையிலே, உலகத்திலே ஜனநாயகப் பற்றுக்கொண்டிருக்கின்ற அத்தனைப் பேர்களுக்கும் துயரத்தைத் தரத்தக்க வகையிலே, மனிதப் பண்பாட்டிலே நம்பிக்கை கொண்டிருக்கின்ற அத்தனைப் பேர்களுக்கும் துக்கத்தைத் தரத்தக்க முறையிலே அவர்களுடைய மறைவு இருக்கிறது என்பதை நாம் உணர்வோம். மக்களுக்குப் பணியாற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன், அமைதிப் பணிகளிலே ஈடுபட்டுக்கொண்டிருந்த அத்தகைய நேரத்திலே, அவர் சென்றுகொண்டிருந்த விமானம் பாகிஸ்தான் விமானத்தால் துரத்தித் துரத்தியடிக்கப்பட்டு, சுட்டு வீழ்த்தப்பட்டது. இந்த நிகழ்ச்சி உலகத்திலே மனிதப் பண்பாட்டிலே அக்கறை கொண்டிருக்கின்ற அத்தனை பேர்களுடைய உள்ளத்தையும் உலுக்குகின்ற ஒன்றாகும்.

கனம் முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றியெல்லாம் தெளிவாக விளக்கிக் கூறினார்கள். பாகிஸ்தான் மிகவும் இழிவான போர் முறையில் ஈடுபட்டிருக்கிறது. போர் என்றால் ஒரு படைக்கும் மற்றொரு படைக்கும் நடக்கின்ற சண்டை என்கின்ற நிலைமை மாறி, அமைதிப் பணிகளிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள்மீது, அதுவும் ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் மீது, மக்களுக்குப் பணியாற்றச் செல்லுகின்ற நேரத்தில் அவருடைய விமானத்தின் மீது தாக்குதல் தொடுத்து, அந்த விமானத்தைத் துரத்தித் துரத்தி அடித்துச் சுட்டு வீழ்த்தியிருப்பது, பாகிஸ்தான் எத்தகைய இழிவான, பண்பாடற்ற போர்முறையில் ஈடுபட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. கனம் முதலமைச்சர் அவர்கள் கூறியது போல், உலக நாடுகள் அனைத்தும் பாக்கிஸ்தானுடைய போக்கைக் கண்டித்திருக்கவேண்டும். உயர்திரு பல்வந்த்ராய் மேத்தா அவர்கள் பொது வாழ்க்கைத் துறையிலே நீண்டபெருங் காலமாக மிகத் திறமையுடன் ஈடுபட்டார் என்பதையும், முன்பு ஜூனகாத்தில் நிலவிவந்த மன்னர் ஆட்சியைப்

3rd November 1965] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

போக்க எங்ஙனம் போராடினார் என்பதையும் நாம் வரலாற்றிலிருந்து அறிகின்றோம். அவர், நல்ல பண்புகளைக் கொண்டிருந்தார் என்பதையும், திறமையுடன் விளங்கினார் என்பதையும், எடுத்துக்கொண்ட எந்தச் செயலையும் முடிப்பதில் மிக்க ஆர்வத்தையும், ஊக்கத்தையும் காட்டினார் என்பதையும், எளிமையான போக்கிலே நாட்டுப் பணிகளை ஆற்றிவந்தார் என்பதையும் நாம் அறிகின்றோம். பணியாற்றச் சென்ற அவருடன் அவருடைய துணைவியாரும் சென்றிருக்கிறார். இந்த விபத்திலே அவரும் மறைந்தார் என்பதும் உடன் சென்றவர்களும் மறைந்தார்கள் என்பதும் நமக்கெல்லாம் கலக்கத்தையும், வருத்தத்தையும் கொடுக்கின்ற ஒன்றாகும். குஜராத் மாநில முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டவர்களுடைய வரிசையிலே வைத்து எண்ணத்தக்க ஒருவராகிய திரு. பல்வந்த்ராய் மேத்தாவினுடைய மறைவு, குஜராத் மாநில மக்களுக்கு மிகுந்த வருத்தத்தையும், கவலையையும் விளைவிப்பதாகும். ஆகவே, அவருடைய பிரிவை எண்ணி வருந்துகின்ற அனைவருக்கும் நம்முடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்ற முறையிலே, கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்து இருக்கின்ற இந்தத் தீர்மானத்தை மீண்டும் ஆதரித்து என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானத்தையும், அதையொட்டி அவர் பேசியுள்ள கருத்துக்களையும் நான் ஆதரிக்கிறேன். குஜராத் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தபோதிலும், திரு. பல்வந்த்ராய் மேத்தா அவர்கள், குஜராத் மாநிலத்திற்கு மட்டும் சொந்தமானவர் அல்ல. இந்த நாட்டுக்கே அவர் சொந்தமானவர். விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்ட ஒவ்வொரு வீரரும் அவர் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவர் இந்த நாட்டுக்கே சொந்தமானவர் என்ற முறையிலே அவருக்கு வீரவணக்கம் செலுத்தவேண்டும். அந்த நேரத்திலே விடுதலைக்காக அவர் எப்படிப் போராடினாரோ, அதே போல், நம்முடைய நாடு ஆக்கிரமிக்கப்பட்ட நேரத்திலேயும் அவர் தன்னுடைய கடமைகளை நிறைவேற்றி வந்தார். அப்படி நிறைவேற்றக்கூடிய நேரத்திலேதான் அவர் தன்னோடு, தன்னுடைய குடும்பத்தையும் தியாகம் செய்தார். அவர்களுக்கு நாம் எல்லோரும் கட்டாயம் வணக்கம் செலுத்த வேண்டும். இந்த நாடே வணக்கம் செலுத்துகிறது. அவர்களுடைய கடமை உணர்ச்சி, உழைப்பு இவைகள் எல்லாம் நமக்கு நல்ல வழிகாட்டியாக இருக்கும் என்பதில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்த நேரத்தில் எவ்வளவு பெரிய சோதனை நமக்கு இன்னும் இருக்கிறது என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும். இதைப்பற்றியெல்லாம் பின்னாலே பேசுகின்றபொழுது பேசிக்கொள்ளலாம். ஆகவே, என்னுடைய சார்பிலும், என்னுடைய கட்சியின் சார்பிலும் மறைந்த திரு. பல்வந்த்ராய் மேத்தா அவர்களுக்கும், அவருடைய மணைவியாருக்கும் அஞ்சலி செலுத்திக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : I associate myself with the sentiments expressed by the Hon. Leader of the House and the other Leaders of Parties. By way of passing the Resolution and as a mark of respect to the departed souls. I request all the hon. Members to stand in silence for two minutes.

The resolution was carried *nem con* all the Members standing in silence for two minutes.

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

மதுரை வேளாண்மைக் கல்லூரி

*222 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) மதுரை அருகே உள்ள வேளாண்மைக் கல்லூரியைச் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பது பற்றிப் பரிசீலிக்க பல்கலைக்கழக ஆய்வுக்குழு ஒன்று கல்லூரிக்கு சமீபத்தில் வந்தது உண்மையா ?

(இ) ஆம் என்றால், விவரம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) மதுரை வேளாண்மைக் கல்லூரியில் இந்த ஆண்டி லிருந்தே முதலாண்டு பி. எஸ்சி. (வேளாண்மை) வகுப்பைத் தொடங்குவதற்குத் தேவையான இணைப்பிற்குச் சென்னைப் பல் கலைக் கழகம் அனுமதி வழங்கியுள்ளது.

(*a*) The answer is in the affirmative;

(*b*) The University of Madras has granted affiliation for starting the first year of B.Sc. (Agri.) course at the Agricultural College, Madurai this year itself.

திரு. செ. மாதவன் : இந்தக் கல்லூரியில் முதல் திட்டமாக எத்தனை மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : முதலில் 80 மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. பி. கே. மூக்கையாத் தேவர் : இந்தக் கல்லூரிக்காக ஊர்ஜிதம் செய்யப்பட்ட மொத்த ஏக்கர் நிலம் எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன் : சர்க்காருக்குச் சொந்தமான நிலம் 100 ஏக்கர் ; பக்கத்தில் 200 ஏக்கர் நிலம் அக்வயர் செய்யப்பட்டிருக் கிறது. மொத்தம் 300 ஏக்கர் நிலம் இந்தக் கல்லூரிக்காக இருக் கிறது.

திரு. கோ. சி. மணி : அக்வயர் செய்யப்பட்ட நிலங்கள் அவ் வளவும் சாகுபடிக்குத் தகுதியானவையாக இருக்கின்றனவா ?